**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செந்துறை.**

**முன்னிலை : திரு.G.வரதராஜன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், செந்துறை.

2025–ம் வருடம் டிசம்பர் திங்கள் 09–ம் நாள், செவ்வாய்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.131/2022**

(CNR No:TNAL0E006782022)

**அரசுக்காக:–**
**காவல் ஆய்வாளர்,**
**இரும்புலிக்குறிச்சி காவல் நிலையம்,**
**(குற்ற எண்.156/2021) ...குற்றமுறையிடுபவர்**

**//எதிராக//**

**1.சிவக்குமார் , (வயது.28/2021)**
**த/பெ. செல்வராசு,**
**2.கமலக்கண்ணன், (வயது.43/2021)**
**த/பெ. காந்தி,**
**3. செந்தமிழ்செல்வன், (வயது.27/2021)**
**த/பெ. நீதி**
**அனைவரின் முகவரி**
**சிறுகடம்பூர்,**
**செந்துறை தாலுக்கா,**
**அரியலூர் மாவட்டம். ...எதிரிகள்**

**(எதிரிகள் 3 மற்றும் 5 க்கு எதிராக ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.224/2025)**

இவ்வழக்கானது கடந்த 24.11.2022–ம் தேதி ஆண்டுபட்டிகை வழக்கு எண்.131/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள்



VARADHARAJAN G
Digitally signed by VARADHARAJAN G
Date: 2025.12.09 16:18:29 +0530

வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 09.12.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1,2,4 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.செல்வமணி,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், என் ஆய்வில் வைத்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>**தீர்ப்புரை**</u>

எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவு.294(b), 323, 506(i)of IPC–ன் கீழ் இரும்புலிக்குறிச்சி காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின் படி வழக்கின் சுருக்கம்:–**</u>

இவ்வழக்கின் புகார்தாரர் உதயகுமார் கடந்த 15.06.2021 ம் தேதி 12.00 மணியளவில் சிறுகடம்பூர் கல்லுக்கட்டை ஏரி அருகில் சுதாகர் என்பவர் வீட்டருகில் இருந்தபோது இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் முன்விரோதம் காரணமாக புகார்தாரரை தேவடியா குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக திட்டியும் கையால் அடித்தும் 1வது எதிரி சிவக்குமார்



VARADHARAJAN G Digitally signed by VARADHARAJAN G
Date: 2025.12.09 16:18:38 +0530

அருவாள் எடுத்து வந்து காட்டி என்னைக்கு இருந்தாலும் உன் உயிர் என் கையில் தான் போகும் என்று புகார்தாரரை கொலை மிரட்டல் விடுத்தும் வாதிக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். எனவே, 1வது எதிரியாகிய உமது செய்கையின் மூலம் இதச.பிரிவுகள்.294(b), 323, 506(i), 2,3,4 எதிரிகளின் செய்கையானது இதச.பிரிவுகள்.294(b), 323–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்று இரும்புலிக்குறிச்சி காவல் நிலைய காவல் ஆய்வாளர் பிரிவு.173(2)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. 1,2,4 எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச.பிரிவு.207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், 1,2,4 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள்.294(b)r/w34 323r/w34, 506(i)r/w34 –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டுகளை எதிரிகளுக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.



VARADHARAJAN G Digitally signed by VARADHARAJAN G
Date: 2025.12.09 16:18:47 +0530

3. இவ்வழக்கின் எதிரிகள் சிவக்குமார், கமலக்கண்ணன், செந்தமிழ்செல்வன் ஆகியோர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஒப்புக்கொண்டு கு.வி.மு.ச.பிரிவு.252 –ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டு, எதிரிகளின் குற்ற ஏற்புரையானது ஒப்புக்கொள்ளப்பட்டது.

**4. முடிவாக,**

**1. 1,2,4 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச.பிரிவுகள்.294(b)r/w.34, 323r/w.34, 506(i)r/w.34–ன் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு கண்டு எதிரிகள் இதச.பிரிவுகள்.294(b)r/w.34, 323r/w.34, 506(i)r/w.34–ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானிக்கப்பட்டு பிரிவு 248(2)கு.வி.மு.ச.வின்படி தண்டிக்கப்பட்டு, இ.த.ச.பிரிவு 294(b)r/w.34 ன் கீழ் ரூ.500/– அபராதமும் ஒவ்வொருவரும், இ.த.ச.பிரிவு.323r/w.34 ன் கீழ் ரூ.500/– அபராதமும் ஒவ்வொருவரும், இ.த.ச.பிரிவு.506(i)r/w.34 ன் கீழ் ரூ.2000/–அபராதமும் ஒவ்வொருவரும், மொத்த அபராத தொகை ரூ.9,000/–மும் அதை கட்ட தவறினால் ஒவ்வொருவரும் 15 நாட்கள் சிறைதண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து**



VARADHARAJAN G Digitally signed by VARADHARAJAN G
Date: 2025.12.09 16:18:59 +0530

**செய்யப்படுகிறது.**

**3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு ஏதும் இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VARADHARAJAN G Digitally signed by VARADHARAJAN G Date: 2025.12.09 16:19:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
செந்துறை.